1984 பிப்ரவரி 21]

காஞ்சிபுரத்தில் வீட்டுவசதி வாரியம் மூலம் கூடுதல் குடியிருப்புகள் கட்டுவதற்கான கோரிக்கை.

111—(* வினா எண் 11613) திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) காஞ்சிபுரத்தில் வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகள் கூடுதலாகக் கட்ட வேண்டுமென கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதன்மேல் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: (அ) ஆம்.

(ஆ) காஞ்சிபுரத்தில் புறநகர் திட்டத்தின்கீழ் ஹட்கோ நிறுவன நிதியுதவியுடன் ''பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்'' ''குறைந்த வருவாய்ப் பிரிவினர்'' மற்றும் ''நடுத்தர வருவாய்ப் பிரிவினர்'' களுக்கு வீடுகள் கட்டும் திட்டமும், ''உயர் வருவாய்'' மற்றும் ''நடுத்தர வருவாய்ப் பிரிவினர்'' களுக்கான வீட்டுமனை மேம்படுத்தும் திட்டமும், வீட்டு வசதி வாரியத்தால் துவங்கப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஹட்கோ நிறுவனம் ரூ, 46.94 லட்சம் நிதியுதவி அளித்துள்ளது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கென்று காஞ்சிபுரத்தில் மொத்தம் எத்தனை ஏக்கர் நிலங்களை அரசு ஆர்ஜிதம் செய்துள்ளது ? எத்தனை வீடுகள் கட்ட அரசு திட்டமிட்டுள்ளது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுர வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழக நிதியுதவியுடன் நலிந்த பிரிவினருக்காக 136 வீடுகளும், மற்றும் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கும், உயர் வருவாய் உள்ளவர்களுக்கும் வீடுகள் கட்டப்படுகின்றன. 13 வீட்டு மனை மேம்பாட்டுத் திட்டம் வீட்டு வசதி வாரியத்தால் நிறைவேற்றப்பட இருக்கிறது. நடுத்தரப் பிரிவினர் களுக்காக 60 வீடுகள் கட்டும் திட்டமும், 50 வீட்டு மனைகள் மேம்படுத்தும் திட்டமும் வீட்டு வசதி வாரியத்தால் செய்யப் பட்டுக் கொண்டிருக்கின்றன, மற்றும் 262 தொடர் வீடுகளும் உயர் வருவாய் பிரிவினருக்கு, 10 வீடுகளும் கட்டும் திட்டத்திலே இப்போது நடைமுறையிலே இருக்கிறது. இதுவரையில் 859 வீடுகள் காஞ்சிபுரத்தைப் பொறுத்த வரையில் கட்டுகிற நிலைமை உள்ளது. 272 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, குறைந்த வருவாய் பிரிவினர்க்கு ஒதுக்கீடுகளில் நெசவாளர்களுக் கென்று வீடுகள் ஒதுக்கப்படுமா? அதேபோல அரசு ஊழியர் களுக்கு கூடுதலாக வீடு கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த வருவாய் பிரிவினர்க்கு 134 வீடுகள் கட்டப்படும். அதிலே நெசவாளர்களுக்கும் வீடுகள் ஒதுக்கப்படும். ஆனால் நெசவாளர்களுக்கு ஒதுக்கீடுகள் செய்யப் படும் நேரத்திலே நெசவாளர்களுக்கு வேண்டிய நெசவு மேடை, தறிக்குழி ஆகியவற்றை அவர்களுடைய செலவிலே தான் அமைத்துக் கொள்ள வேண்டும். அதேபோல அரசு ஊழியர் களுக்கும் வீடுகள் கட்டப்படும்.

திரு. கு. பா. பழனியப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, வீட்டுவசதி வாரியத்தால் வீடுகள் கட்டப்படுகிறபோது எந்தெந்த ஊர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதென்று ஏதாவது வரைமுறை இருக்கிறதா? அப்படியென்றால் விழுப்புரத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை.

திருநெல்வேலி மாவட்ட பத்திரிகைத் துறை

ஊழியர்களுக்கான வீடுகள்.

112—(* வினா எண். 18887) திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்; திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் வீட்டுவசதி வாரியத் தால் கட்டப்பட்ட வீடுகளில் சிலவற்றை அரசாங்க ஒதுக்கீட்டு அடிப்படையில் திருநெல்வேலி மாவட்ட பத்திரிக்கைத் துறை ஊழியர்களுக்கு வீடு ஒதுக்கித் தருமாறு தொடர்ந்து கோரிக்கைகள் சமர்ப்பித்துள்ளார்களென்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இதுபற்றிய விவரம் என்ன ?

(இ) அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : (அ&ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளில் சிலவற்றை அரசாங்க ஒதுக்கீட்டு அடிப்படையில் திருநெல்வேலி மாவட்ட பத்திரிக்கைத் துறை ஊழியர்களுக்கு வீடு ஒதுக்கித் தருமாறு கேட்கப்படுகிறது. வீட்டு வசதி வாரியத்தினுடைய பரிந்துரையை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு வீடுகள் அளிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.